www.agaram.lk

සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

දෙවන වාර ඇගයීම - 2018
இரண்டாந் தவணை மதிப்பீடு - 2018
Second Term Evaluation - 2018

| ශ්‍රේණිය / தரம் / Grade | 09 | විෂයය / பாடம் / Subject | சைவநெறி | පත්‍රය / வினாத்தாள் / Paper | I,II | පැය / மணித்தியாலம் / Hours | 02 |
|---|---|---|---|---|---|---|---|

නම / பெயர் / Name

## பகுதி - I

**மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

1. பூதக் கணங்களுக்கு எல்லாம் தலைவராய் விளங்குபவர்
   I. நந்திதேவர் II. சிவபெருமான் III. மஹாவிஷ்ணு IV. கணபதி
2. மகாவிஷ்ணுவின் தொழிலாய் அமைவது
   I. படைத்தல் II. காத்தல் III. அழித்தல் IV. அருளல்
3. மாணிக்க கங்கை கரையில் அமைந்த ஆலயம்
   I. நல்லூர் II. கதிர்காமம் III. திருச்செந்தூர் IV. செல்வச்சந்நிதி
4. அன்பே சிவம் என்று கூறும் நூல்
   I. திருக்குறள் II. திருப்புகழ் III. திருமந்திரம் IV. திருவாசகம்
5. மனத்தைக் கடவுள்பாற் செலுத்துதல் எனப்பொருள்படுவது.
   I. தாரணை II. தியானம் III. சமாதி IV. நியமம்
6. கிரியை நெறியைக் குறிக்கும் மறுபெயர்
   I. தாசமார்க்கம் II. ஞானமார்க்கம் III. சற்புத்திரமார்க்கம் IV. சகமார்க்கம்
7. வட இந்தியாவில் அமைந்த புனித தலங்களாக கருதப்படுபவை
   I. திருக்கேதிச்சரம் - கதிர்காமம் II. சிதம்பரம் - இராமேஸ்வரம்
   III. கீரிமலை – வைதீச்சரம் IV. காசி - ஹரித்துவார்
8. மூலஸ்தானத்தில் சுதர்சன சக்கரம் காணப்படும் ஆலயம்
   I. முன்னேச்சரம் II. வல்லிபுர ஆழ்வார் ஆலயம்
   III. காரைத்தீவு கண்ணகி அம்மன் ஆலயம் IV. உகந்தை முருகன் ஆலயம்
9. ‘சதசத்து’ என அழைக்கப்படுவது
   I. கன்மம் II. பாசம் III. பதி IV. பசு
10. கந்தரனுபூதி பாடியருளியவர்.
    I. தாயுமானவர் II. அருணகிரிநாதர் III. திருமூலர் IV. பட்டினத்தார்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!


agaram.lk

11. கண்ணப்ப நாயனாரின் இயற்பெயராக அமைவது

I. மறைகாடர் II. சிவகோசாரியார் III. திண்ணனார் IV. காடன்

12. அக்கினி தலமாக விளங்கும் ஆலயம்

I. திருவண்ணாமலை II. காசி III. சிதம்பரம் IV. திருவரங்கம்

13. சகிப்புத்தன்மையின் சிகரமாக விளங்கியவர்.

I. நகுலன் II. சகாதேவன் III. அருச்சுனன் IV. தருமன்

14. காலனிடமிருந்து இறைவனால் காப்பாற்றப்பட்டவர்.

I. இராமன் II. மார்க்கண்டேயர் III. இராவணன் IV. கர்ணன்

15. ஞானசம்பந்தரின் திருமணம் நிகழ்ந்த தலம்

I. திருக்கோலக்கா II. திருவருட்துறை III. நல்லூர் பெருமணம் IV. சீர்காழி

16. நால்வேதங்களும் உணர்த்தும் உண்மை பொருளானவர்

I. சிவபெருமான் II. உருத்திரன் III. யமன் IV. சனீஸ்வரன்

17. சந்திரன் ஒவ்வொரு நட்சத்திரத்தையும் கடக்க எடுக்கும் காலப்பகுதி.

I. காரணம் II. திதி III. வாரம் IV. யோகம்

18. 'சைவசமயக் களஞ்சியம்' என்னும் நூற்றொகுதியை வெளியிட்டவர்

I. சிவபாதசுந்தரனார் II. அருணாசலதேசிகர் III. விபுலானந்தர் IV. யோகர்சுவாமிகள்

19. எமது முன்னோர்கள் கண்ட வாழ்வின் படிநிலைகளாவன

I. ஐந்து II. மூன்று III. நான்கு IV. எட்டு

20. பிதிர்கள் வாழும் திசையாக நம்பப்படுவது.

I. தெற்கு II. வடக்கு III. கிழக்கு IV. தென்மேற்கு

21. பஞ்சகாலத்தில் கஞ்சித் தொட்டித் திருப்பணி செய்தவர்.

I. தருமர் II. விபுலானந்தர் III. விவேகானந்தர் IV. ஆறுமுகநாவலர்

22. சிவபெருமான் மன்மதனை எரித்த தலமாக விளங்குவது.

I. நல்லூர்பெருமணம் II. திருக்குறுக்கை வீரட்டதனம்

III. திருவாரூர் IV. தில்லைச்சிற்றம்பலம்

23. நட்சத்திரவிரதங்களில் ஒன்றாக விளங்குவது.

I. சோமாவாரவிரதம் II. திருவெம்பாவை III. கார்த்திகை விரதம் IV. நவராத்திரி

24. தேவர்களின் இரவு பொழுதாக அமைவது.

I. தட்சணாயனம் II. ஆயனம் III. உத்திராணயம் IV. ஆடிப்பிறப்பு

25. உறவுகளை ஒன்று சேர்த்து மனமகிழ்வையும் நிறைவையும் தருவன.

I. திருமணங்கள் II. விழாக்கள் III. பண்டிகைகள் IV. பிறந்தநாள்

26. ஆழ்வார்கள் அருளிய திருப்பாடல்களின் தொகுப்பாக விளங்குவன.

I. நாலாயிரந் திவ்வியபிரபந்தம் II. பன்னிரண்டாந் திருமுறை

III. சங்கிதைகள் IV. பிரமாணங்கள்

27. பன்னிரு ஆழ்வார்களில் உயிருக்கு ஒப்பானவர்.

I. பெரியாழ்வார் II. குலசேகராழ்வார்

III. மதுரகவி ஆழ்வார் IV. நம்மாழ்வார்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

28. ‘நாலுகவிப் பெருமாள் எனப் புகழப்பட்டவர் ஆழ்வார்.

I. மதுரகவி ஆழ்வார்  II. திருமங்கையாழ்வார்

III. திருப்பாணாழ்வார்  IV. பொய்கையாழ்வார்

29. மணிமுடிச் சோழனின் மகளாக பிறந்தவர்.

I. திலகவதியார்  II. புனிதவதியார்

III. மங்கையர்க்கரசியார்  IV. குலச்சிறையார்

30. சூரணை வதம் செய்வதற்காக முருகப்பெருமானும் வீரவாகு தேவரும் வந்திறங்கிய இடம்.

I. உகந்தை  II. மாந்தோட்டம்  III. கதிர்காமம்  IV. நல்லூர்

(1 X 30 = 30 புள்ளிகள்)

## பகுதி – II

**முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.**

**I.**

1. சிவபெருமானின் அடிமுடி தேடிய தேவர்கள் எடுத்த வடிகள் எவை?
2. நமச்சிவாய பதிகம் பாடியோர் யாவர்?
3. அருணாசல தேசிகர் எங்கே எப்போது பிறந்தார்?
4. யாகங்களில் அக்கினி தேவன் முக்கியத்துவம் பெறுவது ஏன்?
5. ஆவணிச் சதுர்த்தியின் முக்கியத்துவம் யாது?

(14 புள்ளிகள்)

II. மேல்வரும் திருப்பாடல்களில் இரண்டினை எழுதி அவற்றின் பொழிப்பினையும் தருக.

“ ஏழிசையாய் ………………”

“ மற்றுப்பற்று ………………. “

“ போற்றியோ ………………..”

“ நையாத …………………. “

“ காப்பதோர் ………………. “

(14 புள்ளிகள்)

III. மனிதர்கள் ஒழுக்கமும் நன்னடத்தையும் பெறவழிகாட்டுவது சமயமாகும்.

1. சகிப்புத்தன்மைக்கு எடுத்துக்காட்டாய் அமையும் திருக்குறள் ஒன்றினை எழுதுக.
2. குடும்பத்தில் பிள்ளைகள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்.
3. பெரியபுராணம் கூறும் விருந்தோம்பலில் சிறந்து விளங்கிய மூவரைக் கூறுக.

(10 புள்ளிகள்)

IV. விரதங்களும், பண்டிகைகளும் எமது வாழ்வை வளப்படுத்துவன.

1. நவராத்திரி எப்போது அனுட்டிக்கப்படும்?
2. உத்தராயண காலத்தில் சூரியன் பயணிக்கும் இராசிகள் எவை?
3. ஆடிப்பிறப்பை நாம் எவ்வாறு கொண்டாடுகிறோம்?

(10 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

V. “பாண்டிமாதேவி பணி செய்து நாள் தோறும் பரவ”

1. பாண்டிமாதேவியார் கலங்கியது ஏன்?
2. ஞானசம்பந்தர் சைவசமயத்தை பாண்டி நாட்டில் எவ்வாறு மீள தாபித்தார்?
3. மங்கையர்க்கரசியாரின் சைவபணிகளுக்கு உறுதுணை புரிந்தவர் யார்? அவரின் இயல்பு எத்தகையது?

(10 புள்ளிகள்)

VI. “சைவ மக்களின் வானியல் அறிவே பஞ்சாங்கம் எனப்படுவது”

1. ஒரு வாரத்தில் அடங்கும் கிரகங்கள் எவை?
2. திருகணித பஞ்சாங்கம் எவ்வாறு கணிக்கப்படுகிறது?
3. பஞ்சாங்கம் பார்த்து நாம் செய்யும் காரியங்கள் மூன்று எழுதுக.

(10 புள்ளிகள்)

VII. “இறைவன் அன்பு வடிவினர்”

1. சைவநாற்பாதங்கள் எவற்றிற்கு ஒப்பிடப்பட்டுள்ளன?
2. யோகம் என்பதன் பொருள் யாது? அதன் வழி நின்றவர் யார்?
3. சைவநாற்பாதங்களின் வழி நிற்போர் கடைப்பிடிக்க வேண்டிய ஏனைய வழிபாடுகள் எவை?

(10 புள்ளிகள்)

VIII. “திருவருட் சிறப்பு மிக்க தலங்களை தரிசிப்பது எமது கடமையாகும்.

1. எமது நாட்டில் அமைந்துள்ள வரலாற்று சிறப்பு மிக்க சிவதலங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
2. கதிர்காம பாதயாத்திரை செல்லும் அடியாரின் தோற்றம், செயல் என்பவற்றை எழுதுக.
3. தலயாத்திரையால் நாம் அடையும் பயன்கள் எவை?

(10 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk